கருத்து குறிப்பு

# இலங்கைப் பெண்களும் ஊதியம் அற்ற பராமரிப்புப் பணிகளும்

**குறுந்திரைப்படத் தலைப்புகள்**

1. வீட்டுவேலைகளும் வேலைகளே
2. ஊதியம் பெறாமல் பெண்கள் செய்யும் பராமரிப்பு வேலைகளின் பெறுமதி

இலங்கையில் பெண்களின் சனத்தொகை 52 சதவீதமாகும். கடந்த 2015ஆம் ஆண்டில் 7 மில்லியன் மக்கள் தொகையினை எடுத்துக் கொண்டால் அதில் 74.8 சதவீதமானவர்கள் பொருளாதார ரீதியில் நேரடிப் பங்களிப்பினை வழங்காத வேலைகளில் ஈடுபடும் பெண்கள் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. அதிலும் இலங்கையின் சனத்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரங்களின்படி நாட்டின் பொருளாதாரச் செயற்பாட்டில் பெண்களின் பங்களிப்பு 36 சதவீதம் என்று குறிப்பிடப்படுகின்றது.[1] எவ்வாறாயினும் இயக்கம் அற்ற உழைப்பினை வழங்குபவர்களில் 61.4 சதவீதத்தினரான பெண்கள் ‘வீட்டுவேலைகள் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களாகவும்,’ ‘இனவிருத்திச் செயற்பாடுகளில் பங்களிப்புச் செய்பவர்களாகவும்’ உள்ளனர்.

உழைப்பாளர் படையின் அளவுகோலானது ஒருவரின் உழைப்பினூடாக நாட்டின் பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச் செய்வதனைக் குறிக்கின்றது. பணரீதியிலான பெறுமதியினை வழங்குகின்ற சுயதொழில், வேறு வீடுகளில் செய்யும் வீட்டுவேலைகள் உட்பட பலவாறான வேலைகளுக்குப் பயன்படுத்தப்படும் பெண்களின் உழைப்பு நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்கின்ற போதிலும் அந்த உழைப்பினை உழைப்பாளர் படைக்குள் உள்வாங்க வேண்டும் என்ற விடயம் இதுவரை எமது சமூகத்தினதும், தேசிய உழைப்பாளர் படையினைக் கணிக்கின்ற கொள்கை வகுப்பு நிறுவனங்களினதும் அவதானத்திற்குட்படவில்லை. உலகத்தில் வேறு அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பெண்களின் ஊதியமற்ற வேலைகளுக்கு மதிப்பளிக்கப்படுகின்றது.

மனிதரின் நல்வாழ்வுக்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் பராமரிப்பு என்பது அவசியமாக உள்ளதுடன் அனைத்துச் சமூகங்களிலும் ஆண்களை விட ஊதியம் ஏதும் இன்றிப் பெண்கள் அதற்கான பொறுப்பினை வகித்து வருகின்றனர். ஆண் பெண் சமூக நிலை என்பது பண்டைய காலம் தொட்டுப் பிள்ளைகளைப் பாதுகாத்து வளர்த்தல் மற்றும் கல்வி வழங்குதல், குடும்பத்தில் உள்ள வயோதிபர்களைப் பராமரித்தல், நோயாளர்களைப் பராமரித்தல், வீட்டுத்தோட்டம் செய்தல், உணவு தயாரிப்புக்குத் தேவையான பொருட்களையும், நீரினையும், எரிப்பொருட்களையும் சேகரித்தல் ஆகிய பராமரிப்பு வேலைகளில் பெரும்பாலானவை பெண்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. பணப் பெறுமதி இன்றி இவ்வாறான அனைத்துப் பணிகளும் பராமரிப்புச் சேவைகளாகக் (unpaid care work) கருதப்படுகின்றன.

எமது நாட்டில் வாழும் அனைத்துப் பெண்களும் தனக்குரிய இனம், பிரதேசம், வருமான நிலை, குடும்பத்தில் வாழும் உறுப்பினர்கள் எண்ணிக்கை, செய்யும் தொழில் ஆகிய பல விடயங்களின் அடிப்படையில் மேற்கொள்ளும் இப்பராமரிப்பு வேலைகளின் அளவும், இயல்புகளும் மாறுபடக் கூடும். இங்கு சமூக, பொருளாதார, கலாசார ரீதியில் மாறுபாடக் கூடிய காரணிகளும் உள்ளன. இதனால் பராமரிப்பு வேலைகளை இனங்காண்பதும், அதனூடாக சமூகத்தில் மாற்றங்களை நிகழ்த்துவதற்கு கொள்கை ரீதியில் செயற்படுதலும் பெண்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு உதவும். அதேபோன்று வீட்டுவேலைகளில் பங்களிப்பு செய்யும் சில ஆண்கள் எமது வீடுகளில் இருந்தாலும், அவர்களின் அச்செயல்களும் / பணிகளும் அனேகமாக சமூகத்தின் அவதானத்திற்குட்படுவதில்லை.

**இக்குறுந்திரைப்படப் போட்டியில் நாம் எதிர்பார்க்கும் விடயங்கள்**

- நல்லதொரு சமூகத்தினைக் கட்டியெழுப்புவதற்காகப் பெண்களால் செய்யப்படும் அனைத்து பராமரிப்பு வேலைகளையும் ‘பராமரிப்பு வேலைகளாகக்’ கருதி அவ்வேலைகளுக்கான சமூக பொருளாதார ரீதியில் ஓர் பெறுமதியை வழங்குமாறு சமூகத்திற்கு அறிவுறுத்தல்.
- ஊதியம் அற்ற பராமரிப்பு வேலைகளுக்கான (unpaid care work) ஓர் பெறுமதியினைப் பெற்றுக்கொடுத்தல்.
- எமது சமூகத்தில் உள்ள பால்நிலை அடிப்படையில் காலங்காலமாக பகிர்ந்துகொள்ளப்படும் வேலைக் கலாசார வரையறைக்குட்படாமல் வேலைகளை சமமாகப் பகிர்ந்துகொள்வது தொடர்பில் பரந்துபட்ட கலந்துரையாடல்களைக் கட்டியெழுப்புவதற்கு ஏற்றவாறு கட்புல ஊடகங்களைப் பயன்படுத்தல்.

---

[1] இலங்கை சனத்தொகைப் புள்ளிவிபரவியல் திணைக்களம் 2015